# Improving Democratic Climate…

by Narendra Modi 24. December 2009 16:35

நண்பர்களே!

இது என்னுடைய நினைவு பதிவுகள் மட்டுமல்ல, இது உங்களை என்னோடு இணைக்கும் ஒரு பாலம். இந்த பாலத்தின் மூலமாக நம்முடைய எண்ணங்கள், நினைவுகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன. இந்த பாலம்தான் என்னுடைய செயல்களை நோக்கி என்னை அழைத்துச் செல்கிறது. உலக வெப்பநிலை உயர்ந்து எதிர்மறை விளைவுகளை தரும் அதே சமயம், நமது இதயங்கள் சூடாகி, நேர்மறை விளைவுகளைத் தருகிறது. இந்த இதய நெகிழ்விற்கு எந்த ஒரு உலகளாவிய சம்மேளனமும் தேவைப்படுவதில்லை. இந்த பாலம் ஒன்றே நமக்கு இடையில் போதுமானது.

குளிர்க்காலம் என்பது நல்ல ஆரோக்கியத்தை ஒருவருக்கு மட்டுமின்றி, முழு சமுதாயத்திற்கே அளிக்கும் பருவக்காலமாகும். ஜனநாயக ஆரோக்கியம் என்பது ‘அனைத்து மக்கலின் வாக்கு’ என்பதை அடிப்படையாகக் கொண்டது. ஜனநாயகத்தின் அச்சு என்பது, தேர்தலில்ன்போது அனைத்து மக்களும் வாக்களித்தால் மட்டுமே, மக்களுக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் உள்ள உரிமைகளும் & கடமைகளும் வலுப்படும். அப்போதுதான் ஜனநாயகம் முழுமையடைகிறது. நம்முடைய நோக்கம் என்பது 100 சதவீத வாக்குப்பதிவு நடைபெற வேண்டும் என்பதே. முழுமையான பதிவு ஏற்படாவிட்டால், ஜனநாயகமும் வலுவிழந்துப் போய்விடும். இதன் காரணமாக ஜனநாயக சூழ்நிலையும் எந்த முடிவும் எடுக்க இயலாமல் தொங்கல் நிலைக்குப் போய்விடும்.

ஆனால், நம்முடைய இந்த சூழ்நிலையை தவிர்க்க வேண்டும் என்பதே நமது பொறுப்பாகும். ஆகவே, உள்ளூர் சுய அரசாங்க நிறுவனங்களில் தேர்தல்கள் நடக்கும்போது கட்டாய வாக்குப் பதிவை வழங்க வேண்டும் என்பதற்கான அதிகாரபூர்வ ஆணை குஜராத் அரசாங்க சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது. இந்த சுதந்திர இந்தியாவின் இது ஒரு புரட்சிகரமான நிலையாகும். இதன்படி, குடிமக்கள் பஞ்சாயத்துகள், தாலுக்கா மற்றும் மாவட்ட பஞ்சாயத்துகள், நகராட்சிகள் ஆகியவற்றில் ஓட்டுப் பதிவு நடைபெறும்போது கட்டாயமாக வாக்கு பதிவு செய்ய வேண்டும் என்பதாகும். எந்த ஒரு வேட்பாளருக்கும் வாக்களிக்க ஒரு வாக்காளர் விரும்பவில்லையென்றால் அவர் எதிர்மறை வாக்கை பதிவு செய்யலாம். வாக்களிக்காதவர்கள் குறித்த அறிக்கை மாநில தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்படும்.

Copyright © 2009 NarendraModi.com

இந்திய ஜனநாயகத்தை முன்னேற்றுவதில் குஜராத் முன்னணியில் இருக்கிறது. இதன்மூலம், நம்முடைய ஜனநாயகமானது ‘வேட்பாளர் சார்புடையதாக’ மற்றும் ‘குடிமகன் சார்புடையதாக’ அமையும். மேலும், இதன்மூலம் தேவையில்லாத வீண் அரசியல் பேச்சுகளுக்கு ஒரு முடிவு ஏற்படும். இந்த நாடில் உள்ள இளைஞர்களை ஊக்குவிக்கும் ஒரு பெரிய சக்தியாக இந்த கட்டாய ஓட்டுப்பதிவு என்பது இருக்கும் என்று நான் தெளிவாக நம்புகிறேன். அதிக அளவில் ஓட்டுப்பதிவு நிகழ்ந்தால், அரசாங்கம் வலுவாக அமைந்து பொதுமக்களின் நலனில் முழுமையாக அக்கறைக் கொண்டு, பணியாற்றும்.

உள்ளூர் அரசாங்க அமைப்புகளில் தேர்தல் நடைபெறும்போது, பெண் வேட்பாளர்களுக்கு என்று 50% வரை ஒதுக்கீடும் செய்ய இந்த சட்டம் வழிவகுக்கிறது. பெண்களுக்கு சமத்துவம் மற்றும் பெண்கள் ஆளுமை ஆகிய செயல்பாடுகளுக்கு இந்த நடவடிக்கை ஒரு நெம்புகோலாக அமையும்

ஜனநாயக சூழ்நிலையை மேம்படுத்தக்கூடிய தொடக்க நடவடிக்கையான இது குறித்த உங்களுடைய எண்ணங்கள் மற்றும் கருத்துகளை படித்தறிய நான் விரும்புகிறேன். உரிமைகள் மற்றும் கடமைகள் போலவே, எண்ணங்களும், செயல்களும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக விளங்குகின்றன.

சிறிது இடைவெளிக்குப் பிறகு மீண்டும் சந்திப்போம், அதுவரை, நீங்கள் நினைத்து செயல்படுங்கள்.

உங்கள் அன்புமிக்க,



Copyright © 2009 NarendraModi.com